# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
# ஐந்தாம் தவணைப் பரீட்சை - 2022
# Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 5th Term Examination - 2022

FWC

ஐரோப்பிய வரலாறு - I
Europe History - I

Three Hours ten min

Gr -13 (2022)

25B | T | I

**கவனிக்க.**
- எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடை அளிக்குக.
- சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிந்தெடுக்க.
- வழங்கப்பட்டுள்ள நேரம் பகுதி I, பகுதி II இற்கும் உரியதாகும்.

❖ *1 – 10 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவை ஐந்தும் ஒன்று மற்றைவையோடு பொருந்தாது பொருத்தாததை தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குள் எழுதுக.*

1) 1. கரிபியன் கடல் 2. ஏரல் கடல் 3. அசோவ் கடல்
4. கஸ்பியன் கடல் 5. மர்மரா கடல் ( )

2) 1. கோஸ் 2. ஸமோஸ் 3. எல்பா
4. லெஸ்போஸ் 5. டெலோஸ் ( )

3) 1. டறகோ 2. சோலன் 3. கிளைஸ்தினில்
4. பெரிக்கிளீஸ் 5. ஐஸ்ரினியன் ( )

4) 1. பற்றீசியர்கள் 2. பிளெபியர்கள் 3. அடிமைகள்
4. விசிக்கொத் குமுமத்தவர் 5. சுதந்திர மனிதர் ( )

5) 1. சலேர்ணோ 2. விற்றன் பேர்க் 3. பொலஞ்ஞா
4. பதுவா 5. நோப்பல்ஸ் ( )

6) 1. கடலோடி ஹென்றி 2. யூலியற் 3. லாசலே
4. மார்குயிற் 5. ஹென்றி ஹட்சன் ( )

7) 1. ஜோன் வைகிளிப் 2. ஜோன்ஹல் 3. உல்ரிச் சுவில்கிலி
4. ஜோன் ரெட்சல் 5. ஜோன் கல்வின் ( )

8) 1. ஜீன் போடின் 2. தோமஸ் கொப்ஸ் 3. ஜோன் லொக்
4. ஜீன் ஜேக்ஸ்ரூஸோ 5. பிரான்ஸெஸ்கோகுயிசியார்டினி ( )

9) 1. லெபனான் 2. நைஜீரியா 3. இஸ்ரேல்
4. சிரியா 5. ஜோர்டன் ( )

10) 1. வெள்ளமலைபோர் 2. நைல்நதிபோர் 3. ரபல்ஹார் போர்
4. ஒஸ்ரலிற்ஸ் போர் 5. வாட்டலூ போர் ( )



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

❖ **11 – 15 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து சோடிப் பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ள பெயர்கள் ஒன்றுடனொன்று பொருந்தவில்லை. அச்சோடியைத் தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

11) 1. 4ஆம் ஹென்றி - பிரான்ஸ் மன்னர்
2. 7ஆம் ஹென்றி - இங்கிலாந்து அரசர்
3. சார்ல்ஸ் அல்பேட் - ஸ்பானியா மன்னர்
4. 1ஆம் நிக்கலஸ் - ரஷ்ய சக்கரவர்த்தி
5. 1ஆம் வில்லியம் - ஜேர்மனியின் கையிஸ்ஸர் (  )

12) 1. பிரான்ஸ் தேசிய அரசு - ரிச்சலியூ
2. வியன்னா உடன்படிக்கை - மெற்ரேணிக்
3. சபாலாசிப்பேல் மகாநாடு - பார்மேஸ்வரன்
4. இத்தாலிய இளைஞர் - மசினி
5. பேர்ளின் மகா நாடு - பிஸ்மார்க் (  )

13) 1. ஹோமர் - ஒடிசி
2. சொபகிளிஸ் - ஈடிபஸ் ரெக்ஸ்
3. சோக்கிரடீஸ் - இலியாட்
4. பிளேட்டோ - குடியரசு
5. தியூசிடிஸ் - வரலாறு (  )

14) 1. உரோமபுரி - ரைபர்
2. லண்டன் - தேம்ஸ்
3. லிஸ்பன் - ராகுஸ்
4. பாரிஸ் - சைன்
5. பேர்லின் - டனியுப் (  )

15) 1. நூற்றாண்டு போர் - இங்கிலாந்து ஒரு பங்காளி
2. 30 ஆண்டு போர் - இங்கிலாந்து ஒரு பங்காளி
3. 7 ஆண்டு போர் - இங்கிலாந்து ஒரு பங்காளி
4. கிரிமியப் போர் - இங்கிலாந்து ஒரு பங்காளி
5. முதலாம் உலக போர் - இங்கிலாந்து ஒரு பங்காளி (  )

• **16 – 20 வரையான வினாவுக்களுக்கு X ,Y என நிரல்களில் பொருந்தக்கூடிய வகையில் தொடர்படுத்தும் போது வரும் சரியான சேர்மானத்தின் விடையை இனங்கண்டு அவற்றுக்குரிய இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

16)

| X | Y |
|---|---|
| 1. ஹோமர் | A. ஒடிபஸ் றெக்ஸ் |
| 2. சொபோகிறிஸ் | B. அரசியல் |
| 3. ஹெரடோரஸ் | C. குடியரசு |
| 4. பிளேற்றோ | D. ஒடிசி |
| 5. அரிஸ்டோட்டில் | E. வரலாறுகள் |

1. DECAB 2. CEABD 3. DAECB 4. AEBDC 5. EDCAB (  )



agaram.lk

17) X | Y

1. ஜீபிற்றர் — A. அறிவின் தெய்வம்
2. மார்ஸ் — B. காதற் தெய்வம்
3. வீனஸ் — C. போர் தெய்வம்
4. மினேர்வா — D. கடற் தெய்வம்
5. நெப்ற்றியூன் — E. விண்ணகத் தெய்வம்

1. ECBAD 2. DAECB 3. BAEDC 4. EADCB 5. AEBDC ( )

18) X | Y

1. கிளைஸ்தினில் — A. 1 வது உரோம பேரரசன்
2. ஒக்ற்ரேலியன் — B. கிறிஸ்தவர்களுக்கு வழிபாட்டு சுதந்திரம் வழங்கிய முதலாவது உரோம பேரரசன்
3. கொன்ஸ்ற்ரைன்ரன் — C. உரோமர் சட்டங்களை தொகுத்த பேரரசன்
4. தியோடோசியஸ் — D. அதீனிய ஜனநாயகத்தின் தந்தையாவர்
5. ஜஸ்ரினியன் — E. கிறிஸ்தவத்தை அரச சமயமாக்கிய உரோம பேரரசன்

1. EDBCA 2. DABEC 3. CBEAD 4. DECAB 5. AEBDC ( )

19) X | Y

1. நட்சத்திர அமையம் — A. நெப்போலியன் பொனபாட்
2. பிரமாண்டமான கடற்படை — B. ஹென்றி vii
3. கைது செய்வதற்கான அனுமதிபத்திரம் — C. பிஸ்மார்க்
4. ஐரோப்பிய கண்ட பொருளாதார முறை — D. பிலிப்
5. பண்பாடுகளிடையான முரண்பாடு — E. லூயி

1. CEBAD 2. BDEAC 3. EDBAC 4. BAEDC 5. DEBCA ( )

20) X | Y

1. குச்சுக்கைனார்ஜி உடன்படிக்கை (1774) — A. ரஷ்யாவும் ஜேர்மனியும்
2. விலாப்ராங்கா உடன்படிக்கை (1859) — B. பிரான்சும் ஜேர்மனியும்
3. ப்ராங்பேட் உடன்படிக்கை (1871) — C. ரஷ்யாவும் ஜப்பானும்
4. போட்ஸ்மத் உடன்படிக்கை — D. பிரான்சும் ஒஸ்திரியாவும்
5. பிறெஸ்ற் - லிற்ரோவ்ஸ்க் உடன்படிக்கை (1913) — E. ரஷ்யாவும் துருக்கியும்

1. EBDAC 2. DECAB 3. EDBCA 4. CAEBD 5. BEACD ( )

- **21 – 25 வரையுள்ள எல்லா வினாக்களுக்கும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று உரிய தலைப்பிற்கு பொருந்தவில்லை அதனைத் தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

21) இங்கிலாந்தின் பாராளுமன்றம்

1. பெரிய பட்டயம் பாராளுமன்றம் உருவாக்கத்தின் ஆரம்ப கட்டத்தை குறிக்கின்றது.
2. தனது சமய நடவடிக்கைகளுக்கு vii ஆம் ஹென்றி பாராளுமன்றித்தின் உடன்படிக்கையை பெற்றுக் கொண்டான்.
3. ஸ்ருவேர்ட் மன்னர்களுக்கும் பாராளுமன்றத்திற்கும் இடையில் தகராறுகள் ஏற்பட்டன.
4. 1688 இல் சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டது.
5. ஹனோபாரிய அரசர் காலத்தில் பிரதம மந்திரியின் பதவி வலுவான அதிகாரத்தை பெற்றது.

( )



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

22) கைத்தொழில் புரட்சி.
1. இங்கிலாந்திலே தொடங்கியது.
2. தொழிற்சாலை முறை அபிவிருத்தியடைந்தது.
3. தொழிளாலர் வர்க்கம் எழுச்சி பெற்றது.
4. தனியார் துறை முயற்சிகள் முன்னேற்றம் அடைந்தன.
5. சுற்றாடல் பாதுகாக்கப்பட்டது. ( )

23) நெப்போலியனுடைய சீர்திருத்தங்கள்
1. மாகாண ஆட்சி முறை சீராக அமைக்கப்பட்டது.
2. பாப்பரசருடன் சமயம் தொர்பான உடன்படிக்கை ஏற்பட்டது.
3. பேச்சுச் சுதந்திரம் உறுதி செய்யப்பட்டது.
4. ஒரு பிரெஞ்சு வங்கி உருவாக்கப்பட்டது.
5. ஒரு பொதுவான சட்டக் கோவை பின்பற்றப்பட்டது. ( )

24) பிராஞ்சுப் புரட்சியின் பிரதான கட்டங்கள்
1. ஸ்ரேற்ஸ் ஜெனரஸ் கூடியமை.
2. பஸ்ரீல் கோட்டையைத் தகர்தமை.
3. குடியரசுப் பிரகடனம்.
4. லூயி vii முடி சூட்ட பெற்றமை
5. பயங்கர ஆட்சி ( )

25) ருஷ்சியப் புரட்சி
1. புரட்சிக்கு பிரதான காரணமாக அரசியல் பொருளாதார அடக்கு முறைகளும் சமூக அமைதியின்மையும் காணப்பட்டது.
2. சார் மன்னருக்கு எதிராக மேலைத் தேச வல்லரசுகள் புரட்சிக்காரர்களுக்கு ஆதரவளித்தமை.
3. தாராண்மை புரட்சி 1917 மார்ச்சில் இடம் பெற்றது.
4. ரஷ்யாவில் அதிகாரத்தை போல்ஷவிக் கட்சியின் கைப்பற்றின்
5. V.I லெனினால் புரட்சி முன்னெடுக்கப்பட்டது. ( )

❖ **26 – 30 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (A) (B) (C) (D) என்னும் நான்கு மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று அல்லது பல சரியான விடைகளாகும். சரியான விடையை அல்லது விடைகளைத் தெரிவு செய்து.**

**(A) யும் (B) யும் மட்டும் சரியாயின் ……………… 1 எனவும்**

**(B) யும் (C) யும் மட்டும் சரியாயின் ……………... 2 எனவும்**

**(C) யும் (D) யும் மட்டும் சரியாயின் ……………... 3 எனவும்**

**(A) யும் (C) யும் மட்டும் சரியாயின் ……………... 4 எனவும்**

**ஒருவிடை மட்டும் அல்லது இரண்டிற்கு மேற்பட்ட விடைகள் சரியாயின் 5 எனவும் அடைப்புள்ளிக் கோட்டில் எழுதுக.**

| அறிவுறுத்தல்கள் | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| (A) யும் (B) யும் மட்டும் சரி | (B) யும் (C) யும் மட்டும் சரி | (C) யும் (D) யும் மட்டும் சரி | (A) யும் (C) யும் மட்டும் சரி | ஒருவிடை அல்லது இரண்டுக்கு மேற்பட்ட விடைகள் சரியாயின் |

Agaram.LK - Keep your dreams alive!

26) பின்வருவனவற்றில் கிரேக்க நகர அரசுகள் நிலவிய ஆட்சி முறைகள் யாவை?

A) இறை முறை ஆட்சி
B) சில்லோர் ஆட்சி
C) முடியாட்சி
D) சர்வதிகார ஆட்சி ( )

27) மேலே குறிப்பிட்டோருள் உரோமச் சக்கரவர்த்திகள் யாவர்?

A) பைதகோரஸ்
B) வேர்ஜில்
C) நீரோ
D) மார்க்கஸ் ஒரேஸியல் ( )

28) மேல்வருவனவற்றுள் சமய சீர்திருத்தம் ஏற்படுவதற்கு எது ஏதுவாக விருந்த காரணங்கள் யாவை?

A) திருச்சபையிலுள்ள சீர்கேடுகள்
B) பாவமன்னிப்புப் பத்திரம் விற்பனை தொடர்பான கருத்து வேறுபாடுகள்
C) கிறிஸஸ்தவ மினஷரி இயக்கத்தின் தொடக்கம்
D) ஒக்ஸ்பேர்க் சமாதானத்தில் ஏற்பட்ட தீர்மானங்கள் ( )

29) மேல்வருவனவற்றில் 30 ஆண்டு போரின் விளைவுகள் யாவை?

A) ஐரோப்பாவில் மேலும் பல சமயப் போர்கள் ஏற்படுவதற்கு அது வழிவகுத்தது.
B) அரசியல் ரீதியாக ஜேர்மன் இணைக்கப்பட்டது.
C) பிரான்ஸ் ஐரோப்பாவின் மிக வலிமை பொருந்திய அரசாகியது
D) பரிசுத்த உரோம பேரரசு பெயரளவிளான அமைப்பாகியது. ( )

30) மேல்வருவனவற்றில் இத்தாலிய இணைப்போடு தொடர்புடைய நிகழ்ச்சிகள் யாவை?

A) சோல்பரினோ யுத்தம்.
B) டென்மார்க்கிற்கு எதிரான பிரசியாவின் போர்.
C) சிசிலியை கரிபால்டி கைப்பற்றியமை.
D) பாப்பரசின் மீது iii ஆம் நெப்போலியன் படையெடுத்தமை. ( )

- **இல 31 – 35 வரையிலான வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து அடைப்புப் புள்ளிக்கோட்டில் அதன் இலக்கத்தை எழுதுக.**

31) இங்கிலாந்தை தேசிய அரசு ஆக்கிய அரசன் யார்?

1) 7 ஆம் ஹென்றி
2) 8ம் ஹென்றி
3) 4ம் ஹென்றி
4) 1ம் சார்ல்ஸ்
5) 2ம் சார்ல்ஸ் ( )

32) பண்டைய கோல் தேசத்தில் படையெடுத்த மிலேச்ச இனத்தவர்கள்

1) அங்கிலோ சக்ஸ்சோனியர்
2) ஹீனர்
3) வைக்கிங்
4) பிறாங்குகள்
5) லொம்பாடர் ( )

33) "தாய்" என்னும் நூலின் ஆசிரியர் யார்?

1) ஜவன் துர்கினில்
2) லியோ ரோல்ஸ்ரோய்
3) மார்க்ஸிம் கோர்க்கி
4) ஹென்றிக் இப்சன்
5) பொய்டர் டொஸ்ரோ யெவ்ஸ்கி ( )

34) இத்தாலி ஐக்கியத்திற்கு தலைமைவகித்த அரசு எது?

1) சாடினியா
2) சிசிலி
3) உரோம்
4) பர்மா
5) தஸ்கனி ( )



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

35) ஜேர்மன் சமஷ்டிக் குடியரசின் முதலாவது சான்சலர் யார்?
1) கொன்ட்றாட் அடினோர் 2) வில்லி பிரான்ற் 3) கூட் கீசிங்கன்
4) ஹெல்மட் சிமித் 5) ஏரிக்கொனேக்கர் ( )

- **இல 36 – 40 வரையுள்ள வினாக்களில் இரண்டு கூற்றுக்கள் வீதம் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் உள்ள கூற்றுச் சோடிகளுக்குக் கீழே உள்ள அட்டவணையில் காணப்படும் 1, 2, 3, 4, 5 என்பவற்றில் மிகவும் பொருந்துவதை எதுவென்பதைத் தெரிந்து அதன் இலக்கத்தை புள்ளிக்கோட்டில் எழுதுக.**

| | முதலாவது கூற்று | இரண்டாவது கூற்று |
|---|---|---|
| 1. | சரியானது | பிழையானது |
| 2. | சரியானது | சரியானது |
| 3. | பிழையானது | பிழையானது |
| 4. | பிழையானது | சரியானது |
| 5. | சரியானது | சரியானதும் முதல் கூற்றினை நன்றாக விளக்குவதாகும். |

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| 36) | பரசீகளுக்கு எதிரான கிரேக்கர் மேற்கொண்ட யுத்தத்தைமையமாக கொண்டு தனது வீர காலியத்தை எழுதினர். | இளவரசன் என்ற நூலின் ஆசிரியர் உரோமனிய அரசியல் ஞானியான கிசரோ ஆவார். ( ) |
| 37) | கி.பி 313 ஆம் ஆண்டு கொன்ஸ்ந்தானின் மிலான் பிரகடனம் மூலம் கிறிஸ்தவர்களுக்கு வழிபாட்டுச் சுதந்திரம் வழங்கினார் | மிலேச்சர்கள் கி.பி 476 இல் இறுதியான உரோம பேரரசை நீக்கிவிட்டு விகிப்பவை சிம்மாசனம் ஏற்றினார்கள். ( ) |
| 38) | ஐரோப்பிய தேசியவாத மரபினையும் மானிட வாத மரபினையும் புரதான கால கிரேக்கர் உருவாக்கினர். | மகா அலெக்சாண்டர் உரோமப் பேரரசின் முதன்மையான அரசன். ( ) |
| 39) | அதிகார வேறாக்கம் பற்றிய கோட்பாட்டை வோல்டயர் முன்வைத்தார் | ஏழாண்டு போர் ஐரோப்பாவின் இறுதி சமயப் பேராரசு கொள்ளப்படுகின்றது. ( ) |
| 40) | இரத்த ஓட்டத்தை பரசெல்சல் கண்டுபிடித்தார். | மாண்புமிகு புரட்சிக் காலத்தில் இங்கிலாந்து மன்னர் 1ம் சார்ள்ஸினைக் கழுவேற்றினர். ( ) |



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## ஐந்தாம் தவணைப் பரீட்சை - 2022
# Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 5th Term Examination - 2022

FWC

ஐரோப்பிய வரலாறு - II
Europe History - II

Gr -13 (2022) | 25B | T | II

அறிவுறுத்தல்கள் :

- வினாத்தாளை விளங்கிக்கொள்வதற்காக மேலதிகமாக பத்து நிமிடங்கள் வழங்கப்படும். (மொத்தமாக 3 மணித்திலாயங்களும் பத்து நிமிடமும்)
- முதலாம் வினா கட்டாயமானது.
- அத்துடன் பகுதி B இலிருந்து ஒரு வினாவையேனும் பகுதி C இலிருந்து ஒரு வினாவையேனும் தெரிவு செய்து எல்லாமாக மூன்று வினாக்களுக்கு விடை தருக. (முதலாம் வினா உட்பட விடையளிக்க வேண்டிய வினாக்களின் மொத்த எண்ணிக்கை நான்கு ஆகும்).
- முதலாம் வினாவுக்கு விடை அளிப்பதற்கு ஐரோப்பிய புறவுருவப்படம் வழங்கப்படும்.

## பகுதி - A

1) உமக்கு வழங்கப்பட்டுள்ள ஐரோப்பிய புறவுருவப் படத்தில் கீழே தரப்பட்டுள்ள அனைத்து இடங்களையும் குறித்துப் பெயரிடுக.

| | | | |
|---|---|---|---|
| 1. தேம்ஸ் நதி | 2. கீல்கால்வாய் | 3. உரோம் | 4. அட்ரியாட்டிக் கடல் |
| 5. சிசிலி | 6. சென்ற் பீற்றர்ஸ் பேர்க் | 7. கருங்கடல் | 8. றைன் நதி |
| 9. கோர்சிக்கா | 10. டென்மார்க் | 11. இலண்டன் | 12. சுவிட்சர்லாந்து |

(12x1=12 புள்ளிகள்)

## பகுதி - B

2) i) கிரேக்க நகர அரசுகளின் அம்சங்களைப் பரிசீலனை செய்க.
ii) தத்துவம், இலக்கியம் ஆகிய கதைகளில் புராதன கிரேக்கர்களின் சாதனைகளைப் பரிசீலனை செய்க.

(7 + 9 = 16 புள்ளிகள்)

3) புவியியற் கண்டுபிடிப்புக்களின் காரணமாக பொருளாதாரத்தில் மட்டுமன்றி அரசியலிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டன.
i) ஐரோப்பாலே புவியியற் கண்டுபிடிப்புக்களை ஆரம்பித்த இரண்டு ஐரோப்பிய தேசங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
ii) நாடுகாண் பயணங்களுக்கு ஆதரவு புரிந்த மன்னர் இருவரின் பெயர்களைக் குறிப்பிடுக.
iii) ஐரோப்பிய தேசங்கள் மேற்கொண்ட ஆரம்பகால நாடுகாண் பயணங்கள் பற்றி ஒரு சுருக்கமான விளக்கவுரை எழுதுக.
iv) மேலே தரப்பட்ட கூற்றினை புவியியற் கண்டுபிடிப்புக்களின் விளைவுகள் தொடர்பாக ஆராய்க.

(2 + 2 + 5 + 7 = 16 புள்ளிகள்)

4) ஐரோப்பாவில் கைத்தொழில் புரட்சியின் விளைவாக தொழிநுட்பம் பொருளாதாரம், சமூகம் என்பவற்றில் அடிப்படை மாற்றங்கள் ஏற்பட்டன.
i) கைத்தொழிற் புரட்சி முதன்முதலாக ஏற்பட்ட நாட்டின் பெயரை குறிப்பிடுக.



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

ii) அந்த நாட்டில் அது ஏற்படுவதற்கு பொறுப்பாக இருந்த மூன்று காரணங்களை குறிப்பிடுக.
iii) பருத்தித் தொழில் தொடர்பாக மூன்று புதிய கண்டுபிடிப்புக்களை குறிப்பிடுக.
iv) முன் கூறப்பட்ட துறைகளில் அடிப்படை மாற்றங்கள் ஏற்படுவதற்கு கைத்தொழில் புரட்சி எவ்வாறு வழிவகுத்தது என்பதை ஆராய்க.

(1 + 3 + 3 + 9 = 16 புள்ளிகள்)

5) விரும்பிய இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.
i) முப்பது ஆண்டு போர்
ii) இங்கிலாந்து தேசிய அரசு ஆதல்
iii) ரஸ்யப் புரட்சி
iv) அமெரிக்க சுதந்திரப் போர்

(8 + 8 = 16 புள்ளிகள்)

## பகுதி – C

6) “நெப்போலியன்பொனபாட் ஐரோப்பாவின் தலைசிறந்த அரசியல்ஞானிகளில் ஒருவனாகக் கொள்ளப்படுகின்றான்”
i) நெப்போலியன்பொனபாட் பிறந்த இடத்தை குறிப்பிடுக.
ii) பிரான்சிலே சக்கரவர்த்தி ஆவதற்கு முன் நெப்போலியன் தலைமையிலே நடைபெற்ற அயல்நாட்டு படையெடுப்புகள் யாவை?
iii) சக்கரவர்த்தியாவதற்கு முன்பு நெப்போலியன் பொனபாட் பெற்றிருந்த முக்கியமான அரசியல் பதவிகள் யாவை?
iv) நெப்போலியன் பொனபாட் கடைப்பிடித்த உள்நாட்டு கொள்கைகளின் அடிப்படையில் அவனும் ஒரு தலைசிறந்த அரசியல் மேதையாக கொள்ளலாமா என்பதை பரிசீலனை செய்க.

(1 + 2 + 3 + 10 = 16 புள்ளிகள்)

7) பிரெஞ்சப் புரட்சியின் முன் ஐரோப்பாவில் நிலவிய பிரதானமான அம்சங்களை புணரமைப்பதற்கு வியன்னா மாநாடு முயற்சிகளை மேற்கொண்டது.
i) வியன்னா மாநாட்டில் முக்கிய பங்கு வகித்த ஒஸ்திரியாவின் சான்ஸலர் பெயரைக் குறிப்பிடுக.
ii) வியன்னா மாநாட்டில் பங்குபற்றிய ஒஸ்திரியா தவிர்ந்த இரண்டு நாடுகளின் பெயரைக் குறிப்பிடுக.
iii) வியன்னா மாநாட்டின் பிரதானமான இலக்குகளைப் பற்றிய ஒரு சுருக்கமான குறிப்புரை எழுதுக.
iv) வியன்னா மாநாட்டில் அடையப்பட்ட பிரதானமான தீர்மானங்கள் தொடர்பாக மேலே குறித்த கூற்றினை நுணுக்கமாக பரிசீலனை செய்க.

(1 + 2 + 4 + 9 = 16 புள்ளிகள்)

8) ஜேர்மனியை ஐக்கியப்படுத்தியதன் விளைவாக ஐரோப்பாவில் ஆற்றல் மிகுந்த அரசொன்று எழுச்சி பெற்றது.
i) *1815* ஆண்டு ஜேர்மனியில் எத்தனை இராச்சியங்கள் இருந்தன.
ii) ஜேர்மனியை இணைத்து கொள்வதில் எந்த இராச்சியம் தலைமை தாங்கியது.
iii) அதனுடைய சான்ஸலரின் பெயரை குறிப்பிடுக.
iv) ஜேர்மனியின் ஐக்கியத்தில் இடம் பெற்ற பிரதான கட்டங்கள் யாவை?
v) ஜேர்மனி ஐரோப்பாவில் ஒரு ஆற்றல் மிக்க அரசாகியது என்பதை பரிசீலனை செய்க.

(1 + 1 + 5 + 9 = 16 புள்ளிகள்)

9) விரும்பிய இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.
i) *1848* புரட்சி
ii) நாஸிஸம்
iii) கண்டத்திட்டக் கொள்கை
iv) கவுன்ட்கபூர்

( 8 + 8 = 16 புள்ளிகள்)



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk


# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
ஐந்தாம் தவணைப் பரீட்சை - 2022

**Conducted by Field Work Centre, Thondaimanaru.**

**5th Term Examination - 2022**

FWC

## ஐரோப்பா வரலாறு




Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk